PERMANENT REFERENCE

# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE POTTUVIL DIVISIONAL SECRETARIAT DIVISION

001 / 0363 16
SUN
Faculty of Commerce & Management
Eastern University, Sri Lanka.

MR. THAMBIAH SUNDARARAJAN

LIBRARY
19 MAY 1999
Eastern University, Sri Lanka.
PROCESSED
Main Library, EUSL
31554

DEPARTMENT OF COMMERCE
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY, SRI LANKA.

1998

200
Library - EUSL

# ஆய்வறிக்கையின் நோக்கம்

**************

பொத்துவில் பிரதேச செயலகப்பிரிவு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொண்ட ஆய்வின்மூலம், அங்கு காணப்பட்ட வளங்களைக் கொண்டு விவசாயம், கல்வி, சுகாதாரம், மீன்பிடி, வீட்டுவசதி, கூட்டுறவு, சுயதொழில், சிறுகைத்தொழில், புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல், தந்திரோபாயத் திட்டமிடல் மூலம் நிறைவு செய்யக்கூடிய சுருக்கம்.

இப்பிரதேசத்தில் விவசாய நிலங்களை உச்சப்படுத்தலின் நோக்கமாகக் கொண்டு நீர்ப்பாய்ச்சல்வசதி, வடிச்சல் வசதிகளையும், நல்லின குறுகிய கால விதைகளையும் பயன்படுத்தல், பாமர முறையைக் கைவிட்டு, நவீன முறைகளைப் பயன்படுத்தல், கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். விவசாயிகளுக்கு உள்ளீட்டுப் பொருட்களை வழங்கி, வெளியீட்டுப் பொருட்களை சந்தைப்படுத்தக்கூடிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால், நெல்விவசாயம் மட்டுமின்றி, மேட்டுநிலப் பயிர்களையும் விரிவுபடுத்துவதனால் விவசாயமூலம் வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலாம்.

கல்வி சம்பந்தமான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதுடன், மக்களின் கலாச்சாரத்துடன் சம்பந்தமான கல்வியை வழங்குவதுடன், தொழில் நுட்பக் கல்வியையும் அளிப்பதனால் அதிகமானவர்கள் எதிர்காலத்தில் கல்வி கற்கக்கூடியதாகவும், அதன்மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடியதாகவும் இருக்கும்.

வைத்தியசாலைகளின் வசதிகள், தேவைகள் விரிவுபடுத்தப்படுவதனால், சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பழக்கவழக்கங்களை சகல பிரிவுகளுக்கும் உணர்த்துவதனாலும் சுகாதார ஆளணியினரது குறையை நிவர்த்தி செய்யவதாகவும், அரசியல் ரீதியான பாரபட்சம் நீக்கப்படும் நிலையிலும் சகல மக்களும் பொது சுகாதாரத்தை கடைப்பிடிப்பதன்மூலம் எதிர்காலத்தில் பூரண அபிவிருத்தியை அடையக்கூடியதாக இருக்கும்.

சிறு கைத்தொழிலைப் பொறுத்தவரையில் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாக கடன் வசதிகளையும், உள்ளீட்டுப் பொருட்களையும் வழங்கக்கூடியதாகவும் வெளியீட்டுப் பொருட்களை சந்தைப்படுத்தக்கூடியதாகவும் திட்டங்களை வகுத்தும் நவீன முறையிலான பயிற்சிகளை வழங்குவதன்மூலமாக அதிகளவானவர்களை ஈடுபடுத்துவதன்மூலம் வருமானத்தைப் பெருக்கி, வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்யலாம்.

சுயதொழிலில் ஈடுபடுவோர்கள் தங்களின் கலாச்சாரத் தொழில்களில் ஈடுபடுவதினாலும், போதியளவு முதலை கொண்டிராதவர்களாகவும் இருப்பதனாலும் வருமானத்தைப் பெருக்க முடியாதுள்ளது. இவற்றை ஈடுசெய்வதன்மூலமாக உற்பத்தியை அதிகரிக்கச் செய்து வருமானத்தைப் பெருக்கலாம்.

ஆழ்கடல் பிரதேசப்பகுதியாக இருந்தும், ஆழ்கடல் மீன்பிடித்தலில் ஆர்வமான வர்களாக இருப்பதன் காரணம் போதிய முதலீடு இல்லாமையும், ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கான அடிப்படை வசதிகளும் இல்லாமையும் ஆகும். இவற்றை ஈடு செய்வதானின் கடன் வசதிகளை அளிப்பதுடன், நவீன தொழில் நுட்பங்களையும், பயிற்சிகளையும் பயிற்றுவிக்கவேண்டும். நன்நீரைப் பொறுத்தவரையில் ஈடுபடுபவர்களுக்கு, நவீன முறைகளை அறிமுகப்படுத்துவதுடன், நன்நீர் மீன்களை சந்தைப்படுத்தக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதும், மீனவர்களின் எதிர்கால, சமூக பொருளாதாரநிலைப் பேறு வதற்குரிய வசதிகளையும் ஏற்படுத்தி ஆர்வத்தை அதிகரிப்பதன்மூலம் அபிவிருத்தியடையச் செய்யலாம்.

வீடற்றவர்களின் குறைகளை மேற்கொள்வதாயின் "யாவர்க்கும் வீடு" அமைக்கும் அரசின் திட்டங்களை இப்பகுதி உயர்மட்ட அலுவலகங்கள் பெற்றுக்கொடுப்பதுடன், உள்ளூர் மூலப் பொருட்களை கொண்டு குறைந்த செலவிலும் சிக்கனமாக அமைப்பதுடன், ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களை இப்பகுதியிலும் அறிமுகப்படுத்திக் கொள்வதுடன் மின்சாரக் கடன், மலசலகூடம் அமைப்பதற்கான கடன், கிணறு கட்டுவதற்கான கடன் போன்றவற்றிற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

கூட்டுறவு அபிவிருத்தி செய்வதன்மூலம் இப்பகுதியில் மக்களின் முன்னேற்றத்தை அதிகரிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதாவது புதிய கிளைகளை நிறுவுதல், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல். ஏனையவகை கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் உள்ளீட்டுப் பொருட்களை வழங்குவதன் மூலமும் அவர்களிடம் இருந்து உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து வழங்குவதன் மூலமும் தரமான பொருட்களை வழங்குதல். கிராமியவங்கி சேவையை ஆரம்பித்து மக்களின் சேமிப்பை ஊக்கப்படுத்தலும், கடன் வசதிகளைஇவுளித்தலும்.

புனர்வாழ்வுத் திட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை மேற்கொள்ளும்போது, பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தவரை நேரடியாக சேரக்கூடியதாக நடவடிக்கைகளை எடுத்தல். அத்துடன் உடனடியாகக் கிடைக்கவும் வழி செய்தல். மேலும் அயல் பிரதேசங்களில் இயங்கும் இணைப்பாளர்களின் சேவையை கொண்டதான சேவைகளையும் நடைமுறைக்குக் கொண்டுவரல்மூலம் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு உடனடி நடவடிக்கைகளையும் பெறலாம்.

புனரமைப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியானது, குறிப்பிட்ட திட்டங்களை பூரணமான முறையில் பூர்த்தி செய்யக்கூடியதாக திட்டங்களை உருவாக்குதல். அப்படி உருவாக்கப்படுபவை அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவையாக காணப்படும பட்சத்தில், துணைரீதியான வளர்ச்சியை ஏற்படுத்தி அபிவிருத்தியை மேற்கொள்ளலாம்.

## பொருளடக்கம்
*************


| | | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம்-01 | அறிமுகம் | 01 |
| அத்தியாயம்-02 | புத்தக ஆய்வு | 06 |
| அத்தியாயம்-03 | பிரதேச செயலகம்பற்றிய ஆய்வு | 23 |
| அத்தியாயம்-04 | விவசாயம் | 29 |
| அத்தியாயம்-05 | கல்வி | 43 |
| அத்தியாயம்-06 | சுகாதாரம் | 52 |
| அத்தியாயம்-07 | சிறு கைத்தொழில் | 57 |
| அத்தியாயம்-08 | சுய தொழில் | 61 |
| அத்தியாயம்-09 | மீன்பிடி | 67 |
| அத்தியாயம்-10 | வீட்டுவசதி | 73 |
| அத்தியாயம்-11 | கூட்டுறவு | 78 |
| அத்தியாயம்-12 | புனர்வாழ்வு | 82 |
| அத்தியாயம்-13 | புனரமைப்பு | 87 |
| அத்தியாயம்-14 | செயற் திட்ட வடிவமைப்பு | 92 |
| | முடிவு | 113வரை |